சேக்கனூர் ஊராட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள்
திருமதி.S.மாலதிசுரேஷ்பாபு.

பமு/02/2024, நாள்:14.02.2024.

பொருள் : மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - வேலூர் மாவட்டம் - வேலூர் ஊராட்சி ஒன்றியம் - சேக்கனூர் ஊராட்சி சர்வேஎண்.303/1-ல் 0.86 ஏக்கர் அல்லது 3500.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளித்து வரைபடம் அங்கீகரித்தல் - தொடர்பாக

பார்வை : 1.திரு.G.K.பாஸ்கர் (ம) 2நபர்கள், G.R.பாளையம், அணைக்கட்டு TK, வேலூர் மாவட்டம் என்பவரின் விண்ணப்பம்
2.வேலூர் - 1 , வேலூர் மண்டலம் , நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், அவர்களின் கடிதம் ந.க.எண்.VLR/VV7E57DS/119/2023/TCP/வேமா3நாள்:30/12/2023.
3.சேக்கனூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.60,நாள்:12/02/2024

****

உத்தரவு:

வேலூர் மண்டலம், மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அலுவலகம் / வேலூர் ஊராட்சி ஒன்றியம் சேக்கனூர் ஊராட்சி சேக்கனூர் கிராம சர்வேஎண். 303/1-ல் 0.86 ஏக்கர் அல்லது 3500.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் **B.Y.S.** நகர் என்ற மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி பார்வை 1-ல் காணும் கடிதம் முலம் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு மனை பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து வரைபடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.அ (வே.மா)**எண்.119/2023,நாள் 30/12/2023 என எண்ணிட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள் உட்பட்ட இவ்வரைபடம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது

மேலும் பார்வையில் காணும் நகர் ஊரமைப்பு துறையின் சுற்றறிக்கையில் ஒதுக்கீடுகளையும் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும் தானப்பத்திரம் முலமாக பதிவு செய்து ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது மேலும் மனைப்பிரிவு நிபந்தனைகள் குறித்து உறுதி செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் சேக்கனூர் ஊராட்சிக்கு தெருவழி பூங்கா மற்றும் பொது உபயோகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நாள் 07/12/2023,ஆவண எண் 12941/2023 ஆவணங்கள் முன்னிலைக்கு தானமாக 860.80 சதுர மீட்டர் சேக்கனூர் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு துறையில் மனைபிரிவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதை தொடர்ந்து இவ்வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.

14/2/24

தலைவர்
சேக்கனூர் ஊராட்சி மன்றம்
வேலூர் ஊராட்சி ஒன்றியம், (வே.மா.)

இணைப்பு:வரைபடம் மற்றும் மனைபிரிவு நிபந்தனைகள்